**தென் மகாண சபை - 2019**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

---

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

---

தென் மாகாண சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் அதிகாரச்சட்டத்தின் 23(1) ஆம் பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. மாகாண சபைகள் அதிகாரச்சட்டத்தின் 23(2) ஆம் பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) உப பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய பொழிப்பு அறிக்கை 2020 யூன் 30 ஆந் திகதி வெளியிடப்பட்டதுடன், தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) உப பிரிவின் பிரகாரம் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 யூலை 07 ஆந் திகதி வெளியிடப்பட்டது. அரசியலமைப்புச் சட்டத்தின் 154(6) ஆம் உறுப்புரை மற்றும் தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10(1) உப பிரிவின் பிரகாரம் அந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தென் மாகாண சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

### 1.2.1 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (i) | மாகாண நிதியக் கணக்கின் குறிப்பு இலக்கம் 05 இன் பிரகாரம், 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான எஞ்சிய இருப்புகளை கணக்கு வைக்கும் போது காலி மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் ரூபா 3,545,408 தொகையான எஞ்சிய எழுதுகருவிகளின் இருப்பினை உள்ளடக்காமையினால் மாகாண நிதியக் கணக்கில் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறைச் சொத்துக்களின் மீதி அதற்கு சமனான பெறுமதியில் குறைவாக கணிப்பிடப்பட்டிருந்தது. | மாகாண சபையின் அனைத்து நிறுவனங்களினதும் எஞ்சிய இருப்பு கணக்கு வைக்கப்பட வேண்டும். | மூல ஆவணங்களின் அடிப்படையில்எழுதுகருவிகளின் இருப்பு கணக்கு வைக்கப்பட்டுள்ளது. |
| (ii) | தென் மாகாண கைத்தொழில் அபிவிருத்தி கைத்தொழில் அபிவிருத்தி திணைக்களத்தின் உற்பத்தி முற்பணக் கணக்கின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான இருப்பின் பெறுமதி ரூபா 174,299,925 ஆன போதிலும், மாகாண நிதியக் கணக்கின் குறிப்பு இலக்கம் 5 இன் பிரகாரம், அந்த பெறுமதி ரூபா | எஞ்சிய இருப்பு சரியாக கணக்கு வைக்க வேண்டும். | மாகாண திறைசேரிக்கு குறைவாக இருப்பின் பெறுமதி குறிப்பிட்டு அனுப்பல் தொடர்பில் கைத்தொழில் அபிவிருத்தி திணைக்களத்திடம் காரணங்களை |

| | | | |
|---|---|---|---|
| | 161,931,286 ஆனமையால் நிதியக் கணக்கில் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறை சொத்துக்களின் மீதி ரூபா 12,368,639 இனால் குறைவாக கணிப்பிடப்பட்டிருந்தது. | | வினவ எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்டும். |
| (iii) | மீளாய்வாண்டின் போது கைதவிர்க்கப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களுக்குரிய ரூபா 25,766,123 தொகையான திரண்ட பெறுமானத்தேய்வுக் கணக்கிலிருந்து அகற்றப்படாது ஆண்டிற்கான பெறுமானத்தேய்வு செலவினத்திலிருந்து அகற்றப்பட்டமையின் காரணத்தினால் நிதியத்தின் கணக்கில் உள்ளடக்கப்பட்ட ஆண்டிற்கான பற்றாக்குறை மற்றும் ஆதனங்கள் பொறிகள் மற்றும் உபகரணங்களின் மீதி ஆகியவை அதற்கு சமமான பெறுமதியில் குறைவாக கணிப்பிடப்பட்டிருந்தது. | ஆண்டிற்கான பெறுமானத்தேய்வு செலவினம் சரியாக கணிப்பிடப்பட வேண்டும். | கணக்காய்வு அவதானிப்பை ஏற்றுக் கொள்கின்றேன். சரியாக கணக்குகளுக்கு சீராக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (iv) | மீளாய்வாண்டின் போது திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான மாகாண சுகாதாரசேவைகள் திணைக்களத்தின் தீர்க்கப்படாத கட்டுநிதி மீதி ரூபா 354,996,842 ஆன போதிலும், மாகாண நிதிக் கணக்கின் குறிப்பு இலக்கம் 08 இன் பிரகாரம் மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் தீர்க்கப்படாத கட்டுநிதி மீதி ரூபா 359,400,552 ஆனமையினால் மாகாண நிதிய கணக்கில் காண்பிக்கப்பட்டுள்ள நடைமுறை | மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் தீர்க்கப்படாத கட்டுநிதி மீதி, மாகாண நிதியக் கணக்குடன் இணக்கம் செய்யப்பட வேண்டும். | காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களின் சுகாதார சேவைகள், அலுவலகங்கள் 03 மற்றும் வலப்பிட்டிய, தங்காலை ஆதார வைத்தியசாலைகள் 02 இன் பிரகாரம் சீராக்கப்பட்டதன் பின்னர் கட்டுநிதிக் கணக்கின் மீதியானது |

| | | | |
|---|---|---|---|
| | சொத்துக்களின் மீதி ரூபா 4,403,710 இனால் மிகைக் கணிப்பீட்டிற்கு உள்ளாக்கப்பட்டிருந்தது. | | எதிர்காலத்தில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (v) | நிதியத்தின் கணக்குகளின்பிரகாரம் இரு அதிகாரசபைகளுக்கு 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான செலுத்த வேண்டிய மீதி ரூபா 119,277,191 ஆன போதிலும், அந்த நிறுவனங்களின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் பெறவேண்டிய மீதி ரூபா 139,217,696 ஆனமையினால் நிதியத்தின் கணக்கில் காண்பிக்கப்பட்டுள்ள நடைமுறைப் பொறுப்புக்களின் மீதி ரூபா 19,940,505 இனால் குறைக் கணிப்பீட்டிற்கு உள்ளாக்கப்பட்டிருந்தது. | செலுத்த வேண்டிய பணத்தினை சரியாக கணக்கு வைக்க வேண்டும். | கணக்காய்வு அவதானிப்பினை ஏற்றுக் கொள்கின்றேன். செலுத்த வேண்டிய மீதியை திருத்துவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். |
| (vi) | மாகாண சபையின் கீழுள்ள தலைப்பு 25 இற்குரிய ஒவ்வொரு நிதிக்கூற்றுக்களிலும் காண்பிக்கப்பட்டிருந்த ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான மீதி ரூபா 10,653,262,621 ஆக இருந்ததுடன் அத்திகதியில் உள்ளபடியான மாகாண நிதியக் கணக்கில் காண்பிக்கப்பட்டுள்ள மீதி ரூபா 11,166,824,576 ஆனமையினால் அவற்றுக்கிடையே ரூபா 513,561,955 ஆன இணக்கம் செய்யப்படாத வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | நிதியக் கணக்கு மற்றும் தலைப்புகளுக்கு உரிய ஆதனங்கள், பொறிகள், மற்றும் உபகரணங்களுக் குரிய மீதிகள் இணக்கம் செய்யப்பட்டிருத்தல் வேண்டும். | 25 தலைப்புகளிலிருந்து வரவழைக்கப்படும் மூலஆவணம் பதிவேடுகளை அடிப்படையாகக் கொண்டு சொத்துக்கள் கணக்கு வைக்கப் பட்டுள்ளமையை குறிப்பிடுகின்றேன். |

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் பொறுப்பு

-----------------------------------------------------------------------------------------------------

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

மாகாண சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் மாகாண திறைசேரி உள்ளடங்களான அந்தந்த நிறுவனங்களின் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் தென் மாகாண சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

-----------------------------------------------------------------------------------------------------------------------

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான

தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு மாகாண சபையின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.
- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் முகாமைத்துவத்திற்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்துடன் ஒத்திருந்தன.

(ஆ) கடந்த வருடத்திற்கு ஒப்பாக நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 இணக்கமின்மைகள்

### 1.6.1 சட்டங்கள், விதிகள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு** | **இணக்கமின்மைகள்** | | |
| (அ) இலங்கை சோசலிச குடியரசின் தாபன விதிக்கோவை | | | |
| (i) VIII ஆம் அத்தியாயத்தின் 10 ஆம் பந்தி | பிரதான அமைச்சின் உத்தியோகத்தர்கள் வார நாட்களில் | விரலடையாள இயந்திரத்தின் மூலம் ஒவ்வொரு | கணக்காய்வில் சுட்டிக்காண்பிக்கப்பட்டதன் பின்னர் ஒவ்வொரு நாளும் |

| | | | | |
|---|---|---|---|---|
| | மற்றும் 2009 ஏப்ரல் 16 ஆந் திகதிய 09/2009 ஆம் இலக்க அரச நிர்வாகச் சுற்றறிக்கை | கடமைகளுக்கு அறிக்கையிடுவதற்காக விரலடையாள இயந்திரத்தினை பயன்படுத்தியிருந்த போதிலும், வார இறுதி நாட்களில், அரச விடுமுறைநாட்களில் மற்றும் அரச விடுமுறை நாட்களில் அவ்வாறு செயற்படாது இருந்தமை மற்றும் விடுமுறை தின படிகள் ரூபா 914,624 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | நாளும் வருகை மற்றும் வெளிச்செல்லல் சான்றுப்படுத்தப் பட வேண்டும். | விரலடையாள இயந்திரத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு அமைச்சின் செயலாளர் அறிவுறுத்தல் வழங்கியிருந்தார். |
| (ii) | XIX ஆம் அத்தியாயத்தின் 5.2.1 ஆம் உப பந்தி மற்றும் 2016 ஆகஸ்ட் 26 ஆந் திகதிய 04/2016 ஆம் இலக்க அரச நிர்வாகச் சுற்றறிக்கை | தென் மாகாண அபிவிருத்தி அதிகாரசபையின் சாலிமவுண்ட் கைத்தொழில் நகரத்தில் அமைந்துள்ள அரச உத்தியோகபூர்வ இல்லத்தில் வசிக்கும் உத்தியோகத்தர் ஒருவரிடமிருந்து 12½ சதவீதம் படியான வீட்டு வாடகை அறவிடப்படாமையினால் 2007 ஆம் ஆண்டு முதல் 2019 யூலை மாதம் வரை அறவிடப்படாதிருந்த வீட்டு வாடகையின் பெறுமதி ரூபா 331,846 ஆகும். | தாபன விதிக் கோவையின் XIX ஆம் அத்தியாயத்தின் 5.2.1 ஆம் உப பந்தி மற்றும் 2016 ஆகஸ்ட் 26 ஆந் திகதிய 04/2016 ஆம் இலக்க அரச நிர்வாகச் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2007 ஆம் ஆண்டு முதல் 2019 யூலை மாதம் வரையிலும் நிலுவையாக இருந்த உத்தியோகபூர்வ இல்லத்திற்கான வாடகையினை அறவிடுதல் தொடர்பில் பணிப்பாளர் சபையின் தீர்மானத்தினை பெற்றுக்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளதுடன், 2019 ஆகஸ்ட் மாதம் முதல் மாதாந்தம் அடிப்படை சம்பளத்தில் 12.5 சதவீதம் அறவிடப்படும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (iii) | XXI ஆம் அத்தியாயத்தின் 1.1 ஆம் உபபந்தி | சீருடைகளுக்கான படிகளுக்கு உரித்துடைய உத்தியோகத்தர்களின் தொகுதிக்கு உரித்தற்ற ஆசிரியர்களுக்கான சீருடைகள் வழங்குவதற்கு ரூபா 157,706,458 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | தாபன விதிக்கோவையின் XXI ஆம் அத்தியாயத்தின் 1.1 ஆம் உப பந்தியின் பிரகாரம் செயற்பட வேண்டும். | இந்த படியினை செலுத்துவதற்கு உரித்தான தென் மாகாண அமைச்சரவையின் தீர்மான இலக்கம் 806 இன் கீழ் எடுக்கப்பட்டுள்ளமை என்பதை குறிப்பிடுகின்றேன். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 571 | 05 நிறுவனங்களுக்குரிய ரூபா 28,682,581 பெறுமதியான 02 வருட காலங்களை கடந்த 228 பொதுவைப்புக் கணக்குகளின் மீதிகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அரசின் வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (இ) | அரச நிர்வாகச் சுற்றறிக்கை --------------------------- | | | |
| (i) | 2017 பெப்ரவரி 17 ஆந் திகதிய அரச நிர்வாகச் சுற்றறிக்கை 02/2017 | விசேட கடமைகளுக்காக உத்தியோகத்தர் ஒருவர் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் அல்லது கணக்கீட்டு உத்தியோகத்தரின் முன் அனுமதியுடன் அதிவேக பாதையை பயன்படுத்திய சந்தர்ப்பமொன்று அதற்காக பயன்படுத்திய | 2017 பெப்ரவரி 17 ஆந் திகதிய 02/2017 ஆம் இலக்க அரச நிர்வாகச் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அவசரமான மற்றும் அத்தியாவசிய கடமைகளுக்காக வருகை தர வேண்டிய சந்தர்ப்பங்களின் மாத்திரம் அந்தப் பணத்தினை மீளளிப்புச் செய்யமுடியும் என்பதையும் விடுமுறை தினங்களிலும் சாதாரணமான கடமைகளுக்கு வருகை தரும் போது எவ்வித நாட்களிலும் அதிவேக பாதைக்கு செலுத்தப்படும் பணம் மீளளிக்கப்படவில்லை |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வாகனத்திற்காக செலுத்திய நுழைவுக் கட்டணத்திற்கான மீளளிப்பினை மேற்கொள்ள முடியுமான போதிலும், தென் மாகாண கல்விப் பணிப்பாளர் நாளாந்தம் சாதாரண கடமைகளுக்காக வீட்டிலிருந்து அலுவலகத்திற்கு வருகை தரும்போது அதிவேக பாதைகளினை பயன்படுத்திய மைக்காக ரூபா 137,250 ஆன நுழைவுக்கட்டணம் மீளளிக்கப்பட்டிருந்தது. | | என்பதனை குறிப்பிடுகின்றேன். |
| (ii) | 2019 மே 31 ஆந் திகதிய 13/2008(v) ஆம் இலக்க அரச நிர்வாகச் சுற்றறிக்கை | மாகாண பிரதான செயலாளரின் உத்தியோகபூர்வ வாகனத்திற்காக எரிபொருள் வழங்கும் போது அரச நிர்வாக மற்றும் இடர் முகாமைத்துவ அமைச்சின் செயலாளரின் வெளியிடப்பட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் எரிபொருள் படிகள் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும், தென் மாகாண 2019 மே 16 ஆந் திகதிய பிரதம செயலாளரின் சுற்றறிக்கை (நிதி) 02-2019 இன் பிரகாரம் உத்தியோகபூர்வ | 2019 மே 31 ஆந் திகதிய 13/2008(v) ஆம் இலக்க அரச நிர்வாகச் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பிரதான செயலாளரின் சுற்றறிக்கை (நிதி) 02-2019 இன் பிரகாரம் உரிய எரிபொருள் எல்லைகளுக்கு உள்ளடங்கலாக எரிபொருள் படிகள் வழங்கப்பட்டிருந்தது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வாகனத்திற்காக பெற்றுக்கொள்ளப்படும் எரிபொருளின் அளவு அதிகரிக்கப் பட்டிருந்தது. | | |
| (iii) | 2009 மார்ச் 05 ஆந் திகதிய 2007/10(I) ஆம் இலக்க அரச நிர்வாகச் சுற்றறிக்கை | தென் மாகாணத்தின் முன்னாள் விவசாய அமைச்சருக்கு 2004 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டின் ஏப்ரல் மாதம் வரை உத்தியோகபூர்வ இல்லத்திற்கான படிகளாக ரூபா 3,000,000 தொகை 2019 ஏப்ரல் 22 ஆந் திகதி செலுத்தப்பட்டிருந்த போதிலும், இந்த காலப்பகுதியில் அந்த அமைச்சர் காலி மாவட்டத்தில் நிரந்தரமான வசிப்பிடமொன்றில் குடியிருக்கின்றமை வெளிப்படுத்தப்பட்டது. | 2009 மார்ச் 05 ஆந் திகதிய மற்றும் 2007/10(I) ஆம் இலக்க அரச நிர்வாகச் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஆளுனரின் முறையான அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டு மாகாண நிதி விதி 64 இன் பிரகாரம் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. |
| **(ஈ)** | **மாகாண நிதி விதி**<br>--------------------------- | | | |
| (i) | 261.2 | செயல்நிமித்த உப கட்டுநிதியாக ஒரு சந்தர்ப்பத்தில் வழங்ககக் கூடிய தொகை ரூபா 100,000 இற்கு மிகைக்க கூடாது என்பதுடன் அத்தியவசியமான சந்தர்ப்பமொன்றில் பிரதான செயலாளரின் முன் அனுமதியுடன் | மாகாண நிதி விதி 261.2 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | மாகாண கல்வி திணைக்களத்தின் உத்தியோகத்தர்களுக்கு நேரடியாக முற்பணங்கள் வழங்காது சிறாப்பரின் ஊடாக நிகழ்ச்சித்திட்டங்களுக்கு கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படுகின்றது. தென் மாகாண அபிவிருத்தி அதிகாரசபை மாகாண நிதி |

| | | | | |
|---|---|---|---|---|
| | | இந்த எல்லையினை விஞ்சி உபகட்டுநிதி வழங்க முடியுமான போதிலும், அவ்வாறான அனுமதியினை பெற்றுக்கொள்ளாது தென்மாகாண அபிவிருத்தி மற்றும் மாகாண கல்வி திணைக்களத்தின் 16 உத்தியோகத்தர் களுக்கு 2019 ஆம் ஆண்டின் போது 30 சந்தர்ப்பங்களில் 100,000 இற்கு கூடுதலான முற்பணங்கள் ரூபா 7,685,925 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | | விதி 261.2 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (ii) | 272.1 | வெளிவாரி தரப்பினருக்கு ரூபா 2,000 தொகை அல்லது அதற்கு மேற்பட்ட தொகையினை செலுத்தும் போது அதனை காசாக செலுத்த கூடாத போதிலும், கொங்கம விவசாய பண்ணை நிலப்பிரதேசத்தில் பௌதீக மூலதன சொத்துக்களினை கட்டியெழுப்புவதற்கு மற்றும் அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்திற்கு ரூபா 3,389,406 ஆன அனைத்து செலவினங்களும் தென்மாகாண | மாகாண நிதி விதி 272.1 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | மாகாண நிதி விதி 272.1 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கின்றேன். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகத்தின் பெயருக்கு வரையப்பட்ட காசோலை மூலம் இடம்பெற்றிருந்தது. | | |
| (iii) | 283.4 | 02 நிறுவனங்களின் வங்கி நடைமுறை கணக்குகள் 08 இற்கு உரிய வழங்கப்பட்ட போதிலும், கொடுப்பனவிற்கு சமர்ப்பிக்கப்படாத 06 மாதங்களை கடந்த ரூபா 3,103,680 பெறுமதியான 34 காசோலைகளுக்கு உரியதாக உரிய நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை. | மாகாண நிதி விதி 283.4 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சில காசோலைகள் தீர்க்கப்பட்டுள்ளதுடன் தீர்க்கப்படாத காசோலைகளுக்குரிய பதில்களை பின்னர் சமர்ப்பிக்கின்றேன். |

## 1.7 போதியளவு அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள் எல்லைகள் பின்பற்றப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | **வணிக முற்பணக் கணக்கு** | | |
| (i) | மீளாய்வாண்டிற்குரியதாக அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த செலவினத்தின் உச்ச | வணிக முற்பணக் கணக்குகளின் எல்லைகளின் பிரகாரம் செயற்பட | லபுதுவ பண்ணையின் முற்பணக் கணக்கின் செலவினத்தின் உச்ச எல்லை |

| | | | |
|---|---|---|---|
| | எல்லையை மீறிய சந்தர்ப்பங்கள் 02 ஆகும். | வேண்டும். | மீறப்பட்டுள்ளமையை ஏற்றுக்கொள்கின்றேன். செலவினத்தின் உச்ச எல்லையினுள்ளேயேகொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ள தேவையான ஆலோசனைகள் வழங்கப்பட்டது. ஹம்பாந்தோட்டை ருஹுணு ரசார விற்பனை நிலையத்தில் 2018 ஆம் ஆண்டின் போது பெறுமானத்தேய்வு ஒதுக்க கணக்கிற்கு செலுத்த வேண்டிய பெறுமானத் தேய்வின் ஒரு பகுதி 2019 ஆம் ஆண்டின் போது காசாக செலுத்தப் பட்டுள்ளமையால் 2019 ஆம் ஆண்டிற்கான செலவினம் அல்ல என்பதால் எல்லை மீறப்படவில்லை. |
| (ii) | மீளாய்வாண்டிற்குரியதாக அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த பெறுவனவுகளின் ஆகக்குறைந்த எல்லை அண்மிக்காத 02 சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. | வணிக முற்பணக் கணக்குகளின் எல்லைகளின் பிரகாரம் செயற்படல். | தெலிச்சவில பண்ணை முற்பணக் கணக்கின் பிரகாரம், உள்ளபடியான பெறுவனவுகளின் ஆகக் குறைந்த எல்லை செலவினத்தின் ஆகக்கூடிய எல்லையை அண்மித்தமையால் செலவு மீதியின் ஆகக் குறைந்த எல்லையை விஞ்சியுள்ளது. |

| | | |
|---|---|---|
| (ஆ) மீளாய்வாண்டின் போது மாகாண அரச உத்தியோகத்தர்களுக்கு முற்பணக் கணக்கிற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த வரவு மீதியின் ஆகக்கூடிய எல்லையை விஞ்சிய சந்தர்ப்பங்கள் காணப்பட்டது. | எல்லைகளினுள் செயற்பட வேண்டும். | வரவு மீதியின் ஆகக்கூடிய எல்லை மீறப்பட்டமையை ஏற்றுக்கொள்கின்றேன். |

## 2. வருமான முகாமைத்துவம்

---

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டு மற்றும் கடந்த 04 வருடங்களில் மாகாண சபையினால் ஈட்டப்பட்டிருந்த வரி மற்றும் வரியல்லாத வருமானம் தொடர்பான விபரங்கள் பின்வருமாறு. | | |

| வருமான முகாமைத் துவம் | 2019 | 2018 | 2017 | 2016 | 2015 |
|---|---|---|---|---|---|
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| வரி வருமானம் | 7,497 | 8,184 | 7,724 | 6,440 | 5,654 |
| வரி அல்லாத வருமானம் | 1,298 | 988 | 1,068 | 789 | 650 |
| மொத்தம் | 8,795 | 9,172 | 8,792 | 7,229 | 6,304 |

| | | |
|---|---|---|
| கடந்த வருடத்திற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் வரி வருமானம் ரூபா 687 மில்லியனால் அதாவது 8 சதவீதத்தால் குறைவடைந்திருந்ததுடன், வரியல்லாத வருமானம் ரூபா 310 மில்லியனால் அதாவது 31 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. | முகாமைத்துவத்தின் தகவல் ஆகும். | கணக்காய்வு அவதானிப்பினை ஏற்றுக்கொள்கின்றேன் |

**(ஆ) நிலுவை வருமானம்**

-----------------------------------

| | | |
|---|---|---|
| 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான ஆதன்ங்களை ஒப்படைத்தலின் அடிப்படையில் நிலுவை முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 451.01 மில்லியனாக இருந்ததுடன், நிலுவை வருமானத்தில் 2019 ஆம் ஆண்டினுள் அறவிடுவதல்களின் சதவீதம் 21.05 மற்றும் விடுவித்தல் சதவீதம் 25.24 சதவீதம் ஆகும். | நிலுவை வருமானங்களின் விடுவிக்கும் சதவீதத்தினை விட அறவிடல் சதவீதம் உயர்வான பெறுமதியை கொண்டிருக்க வேண்டும். | முத்திரைக் கட்டணங்களின ஆரம்ப மீதியினுள் மதிப்பீடுகளின் மீளாய்வு, இணங்கிய மதிப்பீடுகளின் 300 சதவீத தண்டப்பணத்தை உள்ளடக்கியிருந்தது. 2017-01 உள்ளக சுற்றறிக்கையின் பிரகாரம் இந்த தண்டப்பணம் 10 சதவீதமாக மற்றும் நீதிமன்ற வழக்கு தொடரப்பட்டமையால் 25 சதவீதமாக குறைக்கப்பட்டு எஞ்சிய தொகை விடுவிக்கப் பட்டிருந்தது. 300 சதவீதமான தண்டம் உள்ளடக்கப்பட்ட மதிப்பீடுகளை விடுவிக்கும் போது உயர்வான பெறுமதியை எடுப்பதனால் சேகரிப்பு சதவீதத்தினை விட விடுவித்தல் சதவீதம் உயர்வான பெறுமதியை கொண்டிருந்தது. |

## 3. நிலுவை வருமானம்

--------------------------------

### நிதி பெறுபேறுகள்

------------------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக மாகாண சபையின் நிதியத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளின் பெறுபேறு ரூபா 1,279,965,187 ஆன பற்றாக்குறையாக இருந்ததுடன் அதனோடு ஒத்த கடந்த வருடத்தின் மிகையானது ரூபா 585,671,505 ஆகும். மீளாய்வாண்டின் சம்பளம் மற்றும் படிகள் ரூபா 3,057,114,089 இனால் மற்றும் மேலதிக நேர மற்றும் விடுமுறை தின சம்பளங்கள் ரூபா 493,149,099 இனால் அதிகரித்தமை மீளாய்வாண்டின் பற்றாக்குறைக்கு காரணமாக அமைந்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

------------------------------------

### 4.1 செயலாற்றல்

--------------------

#### 4.1.1 அரசாங்க மானியம்

--------------------------------

| நிதி மூலம் | அங்கீகரிக்கப் பட்ட தொகை | செலவிடப்பட்ட தொகை | குறைப்பயன்பாடு | குறைப்பயன்பாடு அங்கீகரிக்கப்பட்ட தொகையின் சதவீதமாக |
|---|---|---|---|---|
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | % |
| மாகாண குறித்துரைக்கப்பட்ட அபிவிருத்தி மானியங்கள் (PSDG) | 2,233 | 1,040 | 1,193 | 53 |
| எடுகோள் அடிப்படையிலான மானியங்கள் (CBG) | 935 | 481 | 454 | 49 |
| இரண்டாவது சுகாதார துறை அபிவிருத்தி திட்டம் (HSDP) | 234 | 157 | 77 | 33 |
| **மொத்தம்** | 3,402 | 1,678 | 1,724 | 51 |

மேற்படி பகுப்பாய்வு செய்யப்பட்டு தரப்பட்டுள்ளவாறு மாகாண அபிவிருத்தி பணிகளுக்காக மீளாய்வாண்டிற்கான அங்கீகரிக்கப்பட்ட மானியங்களின் மிகவும் உயர்வான சதவீதமொன்று பயன்படுத்திப்பட்டிருக்கவில்லை.

### 4.1.2 மாகாண அபிவிருத்தி திட்டம்

மாகாண சபையின் செயன்முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக மாகாண அபிவிருத்தி திட்டத்தின் கீழ் புதிய பணிகள் மற்றும் முடிவுறாத பணிகளுக்கான 1815 முன்மொழிவுகளுக்காக அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை மற்றும் அந்த பணி முன்மொழிவுகளின் செயன்முன்னேற்றம் பின்வருமாறாகும்.

| விபரம் | புதிய வேலைத்திட்டங்களின் எண்ணிக்கை | நடைமுறை வேலைத்திட்டங்களின் எண்ணிக்கை | மொத்த முன்மொழிவுகளின் எண்ணிக்கை | மொத்த வேலை மதிப்பீட்டின் பெறுமதி |
|---|---|---|---|---|
| | | | | (ரூபா மில்லியன்) |
| முழுமையாக பூர்த்தி செய்யப்பட்ட | 1242 | 111 | 1353 | 1,333.48 |
| 50 % இற்கு மேல் பூர்த்தி செய்யப்பட்ட | 160 | 4 | 164 | 538.13 |
| 50 % இற்கு குறைவாக பூர்த்தி செய்யப்பட்ட | 252 | 4 | 256 | 437.23 |
| ஆரம்பிக்கப்படாத | 40 | 2 | 42 | 53.63 |
| | 1694 | 121 | 1815 | 2362.47 |

மேற்படி பகுப்பாய்வின் பிரகாரம் ஆண்டினுள் முடிவுறுத்துவதற்கு திட்டமிட்படப்பட பணி முன்மொழிவுகளின் 16 சதவீதத்திற்கு அண்மிய அளவின் செயன்முன்னேற்றம் மிகவும் குறைவான மட்டத்தில் காணப்பட்டது.

## 4.2 முறையான அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | தென் மாகாண அபிவிருத்தி அதிகாரசபையுடன் தொடர்புடையதாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டது. | | |
| (i) | 2018 ஆம் ஆண்டிற்காக ஒதுக்கப்பட்ட நிதியேற்பாடுகளுக்கு உரியதாக செயற்திட்ட விடயங்கள் நடைமுறைப்படுத்துவதற்கு உரிய அளவீடுகள் மற்றும் வழிகாட்டிகள் தயாரிக்கப்பட்டிராததுடன் ஆகக்குறைந்தது 2016/01(1) ஆம் இலக்க நிதி ஆணைக்குழுவின் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு இணங்கியிராத ரூபா 87,238,285 தொகையான 31 பணி முன்மொழிவுகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது. மேலும் 11 பணி முன்மொழிவுகளுக்காக ரூபா 42,400,000 கூட்டுத்தொகையான நிதியேற்பாடுகள் மற்றும் கட்டுநிதி 2018 திசெம்பர் 31 | செயற்திட்டத்திற்காக முறையான அளவீடுகள் மற்றும் வழிகாட்டிகளுக்கு இணங்கவும் சுற்றறிக்கையின் பிரகாரமும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அங்கீகரிக்கப்பட்ட வேலை முன்மொழிவுகளுக்கு உரிய நிதியேற்பாடுகளின் எல்லையினுள் நிறைவேற்றப் பட்டுள்ளது. |

| | | | |
| --- | --- | --- | --- |
| | ஆந் திகதி விடுவிக்கப்பட்டிருந்த போதிலும், அதற்குரிய செயற்திட்ட முன்மொழிவுகளுக்காக 2019 யூலை 31 ஆந் திகதி வரையிலும் பிரதான செயலாளரின் அங்கீகாரம் கிடைத்திராத போதிலும், அதிகாரசபையினால் ரூபா 15,403,835 தொகையான செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | | |
| (ii) | மூலதன செலவினத்தை முறைமைப்படுத்துதல் தொடர்பிலான பிரதான செயலாளரின் 03/2015 ஆம் இலக்க 2015 யூன் 26 ஆந் திகதிய சுசற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு இணங்காது தென்மாகாண பிரதான அமைச்சினால் 2011 ஆம் ஆண்டு வரையிலும் அதிகாரசபைக்கு விடுவிக்கப்பட்ட பணத்தின் ரூபா 136,237,163 கூட்டுத்தொகை தீர்க்கப்படாது அதிகாரசபையின் வங்கிக் கணக்குகளில் அதிகாரமற்ற முறையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. மாகாண நிதி விதி 268.2.1 இற்கு இற்கு இணங்காத வகையில் அந்த வங்கிக் கணக்குகள் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் | பிரதான செயலாளரின் சுற்றறிக்கை, மாகாண நிதி விதி மற்றும் தென் மாகாண அபிவிருத்தி அதிகாரசபையின் விஞ்ஞாபனம் ஆகியவற்றின் பிரகாரம் செயற்பட வேண்டும். | வருமானங்களை மாற்றுதல் தொடர்பில் வருமான தலைப்புக்களில் அடையாளம் காணுதலொன்று இடம் பெற்றிருக்கவில்லை. ஆலோசனைகள் கோரப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | 1995 இன் 1 ஆம் இலக்க தென் மாகாண அபிவிருத்தி அதிகாரசபையின் விஞ்ஞாபனத்தின் 25(2) பிரிவிற்கு இணங்காத வகையில் அந்த கணக்கின் வைப்புகளிலிருந்து ஏற்றப்பட்ட ரூபா 9,950,045 கூட்டுத்தொகையான வட்டி வருமானங்கள் அதிகாரசபையினால் பல்வேறு கடன் வசதிகளை வழங்கும் நிகழ்ச்சித்திட்டங்களுக்காக உரிய அங்கீகாரமின்றி பயன்படுத்தப்பட்டிருந்தது. | | |
| (iii) | நிதி ஆணைக்குழுவின் FC/3/3/2014 மற்றும் 2014 திசெம்பர் 31 ஆந் திகதிய சுற்றறிக்கைக்கு இணங்காத வகையிலும் 2016, 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளுக்கான நிர்வாக செலவினங்களை மேற்கொள்வதற்கு பிரதான செயலாளரினால் ரூபா 6,661,619 கூட்டுத்தொகை வழங்கப்பட்டுள்ள போது அதிகாரசபைக்கு கிடைத்த ரூபா 38,000,000 தொகையான மூலதன தொகையில் ரூபா 3,420,000 தொகை நிர்வாக செலவினங்களுக்காக மேற்கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | நிதி ஆணைக்குழுவின் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிர்வாக செலவினங்கள் முற்பணங்கள் கிடைத்த பின்னர் அந்த பணம் மீண்டும் செயற்திட்ட கணக்கிற்கு மிகையறவீடாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கும் அடிப்படையில் தென்மாகாண அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரத்தின் அடிப்படையில் கட்டுநிதிகள் மாற்றப்பட்டுள்ளன. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2019 ஆம் ஆண்டினுள் தேசிய பாடசாலைகளின் நிர்மாணங்களினை மேற்பார்வை செய்வதற்காக மாகாண கல்விப் பணிப்பாளர், மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் மற்றும் கணக்காளர் ஆகிய உத்தியோகத்தர்கள் மூவருக்காக 11 மாதங்களுக்காக வரிசை அமைச்சின் செலவின தலைப்பின் ஊடாக அந்த நிர்மாணங்களின் மேற்பார்வை தொடர்பில் எவ்வித அறிக்கையினையும் சமர்ப்பிக்காத போது ரூபா 571,458 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | நிர்மாணங்களின் மேற்பார்வைகள் தொடர்பில் அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | தென்மாகாண பாடசாலைகள், கல்வியியல் கல்லூரிகள், ஆசிரியர் பயிற்சி காலாசாலைகள் ஆகியவற்றின் நிர்மாணங்கள் மற்றும் புனரமைப்பு பணிகள் 2015 ஆம் ஆண்டிற்கு முன்பிருந்து கணக்கு பிரிவின் விடயப் பரப்பினுள் உள்ளடக்கப்பட்டிருந்தது. ஏனைய மாகாணங்களில் இந்த பணி நிறைவேற்றப்படுவது திணைக்களத்திற்கு இணைப்பு செய்யப்பட்டுள்ள பொறியியலாளர் ஒருவரின் கீழான தனியானதொரு பதவியணியால் ஆகும். அமைச்சின் அங்கீகாரத்தின் அடிப்படையில் வாரஇறுதி நாட்களில் 04 நாட்கள் மேற்பார்வை இடம்பெற்றது. தொழில்நுட்ப பிரச்சினைகள் அல்லாத பௌதீக ரீதியில் இடம்பெறும் பழுதுபார்த்தல்கள் மற்றும் நிர்மாணங்கள் மாத்திரம் ஆகும். |
| (இ) | அரச சேவைகள் ஆணைக்குழுவின் அங்கீகாரத்தின் | சேவைப் பிரமாணங்களின் பிரகாரம் | கௌரவ ஆளுநரினால் அவரின் அதிகார எல்லைக்கு |

அடிப்படையில் இணைத்துக் கொள்ளப்பட்ட நாடாளவிய ரீதியிலான சேவைகளுக்காக நிறைவேற்றுதர உத்தியோகத்தர்கள் தென்மாகாண சபைக்கு இணைப்புச் செய்யப்பட்ட பின்னர் ஆளுநரின் செயலாளர், பிரதி தலைமை செயலாளர், மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளர், சபை செயலாளர் மற்றும் மாகாண அமைச்சின் செயலாளர் ஆகிய பதவிகளுக்கு நியமிப்பதற்கு பதவிகளுக்கான நியமனங்கள் ஆளுநரினால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன்போது விசேட தரங்களுக்கு பதவியுயர்வுகளுக்காக அந்த சேவைகளுக்குரிய சேவைப் பிரமாணங்கள் பூர்த்தி செய்யப்பட்டிராத போதும் நியமனங்கள் அதிகாரியின் பரிந்துரைகள் இல்லாது ஆளுநரினால் பதவியுயர்வுகள் வழங்கப்பட்டிருந்தது. மேலும், அந்த பதவி களுக்குரிய சம்பள படி நிலைகளுக்கு சமாந்தரமான சம்பளத்துடன் அதற்குரிய ஏனைய படிகள் மற்றும் வரப்பிரசாதங்கள் வழங்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

பதவியுயர்வு வழங்கப்பட வேண்டும்.

உள்ளடங்கலாக மக்களுக்கான சேவையை வழங்கும் நோக்கில் உத்தியோகத்தர்களுக்கு குறித்த பதவிகளில் பதிற்கடமை நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

## 4.3 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
| --- | --- | --- | --- |
| (அ) | தாசின் நுரையீரல் ஆய்வுகூடத்தின் 2012 சனவரி 13 ஆந் திகதி பொருத்தப்பட்ட கைவிரலடையாள இயந்திரம் 06 மாதங்கள் கடப்பதற்கு முன்னர் யூன் மாதம் செயலிழந்திருந்தது. அத்திகதி முதல் 2019 யூன் மாதம் வரைக்கும் கைவிரல் அடையாள இயந்திரமொன்று பயன்படுத்தப்பட்டிராததுடன் அந்த இயந்திரத்தினை பழுதுபார்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பதவியணியின் வருகை மற்றும் வெளிச் செல்லுகை உறுதிப்படுத்துவதற்கு பொருத்தப்பட வேண்டிய கைவிரல் அடையாள இயந்திரமொன்றினை பயன்படுத்த வேண்டும். | புதிய கைவிரலடையாள இயந்திரமொன்று பொருத்தப்பட்டுள்ளது |
| (ஆ) | அம்பாந்தோட்டை மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளரின் அலுவலகத்தில் 2019 சனவரி 01 ஆந் திகதியில் உள்ளபடியான எழுதுகருவிகளின் இருப்பு ரூபா 407,180 தொகையும் ஆண்டினுள் கொள்வனவு செய்வதற்காக ரூபா 7,640,145 தொகையும் மீளாய்வாண்டின் நுகர்வுக்காக ரூபா 1,585,307 தொகையுமாக | எழுதுகருவிகளின் இருப்பு சரியாக வகைப்படுத்தப்பட வேண்டும். | எழுதுகருவிகளின் இருப்பின் வகைப்படுத்தலின் ஏற்பட்ட தவறினை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | 2019 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் உள்ளபடியாக எஞ்சிய இருப்பு ரூபா 6,462,018 ஆகும். இதன் பிரகாரம் வருடாந்த நுகர்வு தேவைப்பாட்டினை கருத்திற்கொள்ளாது எழுதுகருவிகளின் இருப்பானது கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. | | |
| (இ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான மாகாண அரச உத்தியோகத்தர்களின் முற்பண கணக்கின் மீதி ரூபா 1,415,557,677 ஆக இருந்ததுடன், அந்த மீதியினுள் 427 உத்தியோகத்தர் களிடமிருந்து தொடர்ந்தும் அறவிடப்பட வேண்டிய ரூபா 24,165,058 கூட்டுத்தொகையான கடன் மீதிகள் உள்ளடங்கியிருந்தது. மேலும் தென் மாகாண சபையின் நிறுவனங்களை போன்றே ஏனைய மாகாண சபைகள் மற்றும் மத்திய அரசின் நிறுவனங்களிலிருந்து இடமாற்றம் பெற்று வந்த 115 உத்தியோகத்தர்களுக்காக செலுத்த வேண்டிய ரூபா 6,205,632 தொகையான கடன் மீதியினை | கடன் மீதியை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சில கடன் மீதிகள் மிகவும் பழமையான மீதிகளாக உள்ளதுடன் அவற்றை இனங்காணுதல் சிரமமான விடயமாக காணப்பட்டது. எதிர்காலத்தில் அதனை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| | தீர்ப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஈ) | மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (252 ஆம் இலக்க அதிகாரம்) 317 பிரிவின் பிரகாரம் தென் மாகாணத்தின் மாநகர சபைகளின் பணிகள் தொடர்பில் மாகாண ஆளுனரினால் தயாரிக்கப்பட்டு மாநகர சபைக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆண்டறிக்கைகள் 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளுக்காக சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை. | மாநகர சபைகள் கட்டளைச்சட்டத்தின் 317 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் உரிய முறையில் நடவடிக்கை எடுக்கின்றேன். |

## 4.4 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| காலி மாவட்டத்தின் மருந்துப் பொருட்கள் களஞ்சியசாலையின் 2019 ஆம் ஆண்டில் களஞ்சிய பரிசோதனை அறிக்கைகளின் பிரகாரம் கைதவிர்க்கப்பட வேண்டியது என இனங்காணப்பட்ட ரூபா 17,755,890 பெறுமதியான 154 மருந்து பொருள் வகைகள் 2019 நவம்பர் 29 ஆந் திகதி வரையிலும் கைதவிர்ப்பதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | களஞ்சிய பரிசோதனை அறிக்கையின் பிரகாரம் மருந்துப் பொருட்கள் கைதவிர்ப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | துரிதமாக கைதவிர்ப்பதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்கின்றேன். |

## 4.5 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | பிரதான அமைச்சினால் 2019 ஆம் ஆண்டு கிராம உத்தியோகத்தர்களின் இயலளவு அபிவிருத்தி இயலுமை பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தின் மூலதன செலவினத்தின் கீழ் எழுதுகருவிகளின் கொடுப்பனவாக தென்மாகாண கிராம உத்தியோகத்தர்களுக்காக 2019 மே 24 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்ட பணிகளுக்கு மேலும் ரூபா 1,500 படியான கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்ட காரணத்தினால் சுமார் 2,095 கிராம உத்தியோகத்தர்களுக்கு ரூபா 3,142,500 ஆன தொகை உரிய அங்கீகாரமின்றி செலுத்தப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக குறித்த காசோலையினை கையளிக்கும் வைபவங்கள் 02 நடாத்தப்பட்டிருந்ததுடன் அதற்காக ரூபா 1,259,163 தொகையும் செலவிடப்பட்டிருந்தது. | அங்கீகரிக்கப்படாத மேலதிக கொடுப்பனவுகளை செலுத்தும் போது உரிய அங்கீகாரத்தினைப் பெற்று கொடுப்பனவுகளை மேற்கொள்ள வேண்டும். | அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்து உள்ளமையினால் ஒதுக்கப்பட்ட நிதியேற்பாட்டின் கீழ் கொடுப்பனவுகளை மேற்கொண்டேன். |
| (ஆ) | றுகுணு அபிவிருத்தி பணியகத்தினால் ரூபா 46,042,006 தொகை செலவிடப்பட்டு அரச காணியொன்றில் நிர்மாணிக்கப்பட்டிருந்த | உரிய முறையில் இரண்டாம் தரப்பினருக்கு கையளிக்கப்பட வேண்டும். | குறித்த கட்டிடத்தினை மீள சுவீகரிப்பதற்கு வழக்கினை தொடருமாறு |

| | | | |
|---|---|---|---|
| | ஹிக்கடுவ அபி கட்டிடத்தின் பெறுகை வழிகாட்டி கோவையினை பின்பற்றாது இரண்டாம் தரப்பினருக்கு கையளிக்கப்பட்டமை மற்றும் தற்போது பயன்பாட்டிற்கு எடுக்கப்படாது மூடி வைக்கப்பட்டுள்ளதுடன் 2019 ஆம் ஆண்டிற்காக பெற்றுக்கொள்ள வேண்டிய ரூபா 6,800,000 தொகையான குத்தகை பணமும் கிடைத்திருக்கவில்லை | | ஹிக்கடுவ பிரதேச செயலாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது |
| (இ) | தேர்தல்கள் ஆணைக்குழுவின் 2019 செப்தெம்பர் 18 ஆந் திகதிய 01 ஆம் இலக்க EC/EDR/PRE-2019 ஆம் இலக்க சுற்றறிக்கை மற்றும் 2019 யூன் 17 ஆந் திகதிய பாதீட்டு சுற்றறிக்கையின் இலக்கம் 4/2019 ஆகியவற்றுக்கு இணங்காத வகையில் தென் மாகாண அபிவிருத்தி அதிகாரசபையினால் ரூபா 500,000 தொகை செலவிடப்பட்டு 30 ஊடகவியாலர்களுக்காக கைத்தொலைபேசிகள் பகிர்ந்தளிக்கப்பட்டன. | தேர்தல் ஆணைக்குழுவின் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | சுற்றறிக்கைக்கு இணங்க திருத்தப்பட்ட வேலை முன்மொழிவுகளின் பிரகாரம் இடம்பெற்றது. |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | தென் மாகாண அபிவிருத்தி அதிகாரசபையின் 2019 அபிவிருத்தி திட்டத்தின் கீழ் தன்னார்வ அமைப்புகளுக்காக பிளாஸ்ரிக் கதிரைகள் 16,056 எண்ணிக்கையானவை கொள்வனவு செய்வதற்காக ரூபா 15,880,200 தொகை செலவிடப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| (i) | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.1 மற்றும் 4.4 ஆம் வழிகாட்டிகளுக்கமையாத வகையில் தென் மாகாணத்தின் 03 மாவட்டங்களக்காக வேறாக துண்டாக்கப்பட்டு பெறுகைகள் இடம்பெற்றிருந்ததுடன், பிரதம செயலாளரின் 3/2016 ஆம் இலக்க மற்றும் 2016 ஆகஸ்ட் 24 ஆந் திகதிய சுற்றறிக்கைக்கு இணங்காத வகையில் பொருட்களுக்காக சந்தைவிலை ஒப்பீட்டு முறைமையின் கீழ் திணைக்களத்தின் பெறுகைகள் குழுவின் அங்கீகரிக்கப்பட்ட எல்லையினை விஞ்சி ரூபா 16.5 மில்லியன் மதிப்பீட்டு பெறுமதியுடைய இந்த பெறுகை இடம்பெற்றிருந்தது. | பெறுகைகள் வழிகாட்டிக் கோவை மற்றும் சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் சரியாக செயற்பட நடடவடிக்கை எடுக்கின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | பிளாஸ்டிக் கதிரைகளை கொள்வனவு செய்வதற்காக சந்தை விலை ஒப்பீட்டு முறைமையின் கீழ் வழங்குநரிடம் கூறுவிலைகளை கோரும் போது திட்டவட்டமான அமைப்புக் குறிப்பீடுகளை குறிப்பிடாது பிளாஸ்டிக் கதிரைகளை உற்பத்தி செய்யும் நிறுவனத்திடமிருந்து மற்றும் பிளாஸ்டிக் கதிரைகளை விற்பனை செய்யும் வியாபார நிலையங்களிலிருந்து கூறுவிலைகள் கோரப்பட்டிருந்தன. அதன் பிரகாரம், பெறுகைகளுஞ் குழுவிற்கு கிடைத்த ஆகக் குறைந்த கூறுவிலைகள் தொடர்பில் கவனம் செலுத்தாது கூடுதலான விலையில் கதிரைகளை கொள்வனவு செய்வதற்காக ரூபா 2,819,085 கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது. | திட்டவட்டமான அமைப்புக் குறிப்பீடுகள் குறிப்பிடப்பட்டு கூறுவிலைகள் கோரப்பட வேண்டும். | மாவட்டத்தினுள் இலவசமாக போக்குவரத்து செய்தல் எனும் விடயத்தினை கருத்திற்கொண்டு பெறுகைகள் குழுவினால் நிறுவனம் தெரிவு செய்யப்பட்டிருந்தது. |
| (iii) | நேரடியாக உற்பத்தி நிறுவனங்களிடமிருந்து கூறுவிலைகள் கோரப்படடாது, ஒரு உற்பத்தி நிறுவனத்தின கூறுவிலைகளுடன் மொத்த மற்றும் சில்லறை வழங்குநர்களின் கூறுவிலைகளை ஒப்பிடுவதன் மூலம் கதிரைகளை கொள்வனவு செய்ய பெறுகைகள் குழு தீர்மானித்தமையால் ரூபா 4,300,988 ஆன நட்டம் அரசிற்கு ஏற்பட்டிருந்தது. | அரசிற்கு ஏற்ட்ட நட்டத்தினை பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர் களிடமிருந்து அறவிட வேண்டும். | ஆரம்ப விசாரணைகளின் பின்னர் எஞ்சிய நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றேன். |

(உ) தென் மாகாண அபிவிருத்தி அதிகாரசபையின் பதவிநிலை உத்தியோகத்தர்களின் உத்தியோகபூர்வ வாகன கொடுப்பனவகள் மற்றும் எரிபொருள் கொடுப்பனவுகள் தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| | | |
|---|---|---|
| (i) திறைசேரி செயலாளரின் PED 1/2015 ஆம் இலக்க மற்றும் 2015 மே 25 ஆந் திகதிய சுற்றறிக்கையின் 3.1 மற்றும் 3.2 ஆம் பந்திகளுக்கு இணங்காத வகையில் அதிகாரசபையின் தலைவரால் பயன்படுத்திய உத்தியோகபூர்வ வாகனத்திற்காக 2016 சனவரி முதல் 2019 யூன் மாதம் வரையிலும், மாதத்திற்கு அங்கீகரிக்கப்பட்ட எரிபொருள் எல்லையை மிகைத்து ரூபா 1,999,984 கூட்டுத்தொகையான 17,092 லீட்டர் எரிபொருள் மற்றும் அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகத்தினால் பயன்படுத்தப்பட்ட உத்தியோகபூர்வ வாகனத்திற்காக 2016 சனவரி முதல் 2018 செப்தம்பர் மாதம் வரையிலும், மாதத்திற்கு அங்கீகரிக்கப்டப்ட எரிபொருள் எல்லையை மிகைத்து ரூபா 714,672 கூட்டுத்தொகையான 7,256 லீட்டர் எரிபொருள் கட்டளைகள் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. | 2015 மே 25 ஆந் திகதிய திறைசேரி செயலாளரின் PED 1/2015 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். | அரசிற்கு அறவிடப்பட வேண்டிய ரூபா 1,999,984 ஆன தொகையை அறவிடுவதற்காக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (ii) | மேற்படி சுற்றறிக்கையின் 3.3 ஆம் பந்திக்கு இணங்காத வகையில் அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகத்திற்கு 2018 ஒக்தோபர் முதல் 2019 யூன் வரையிலும், போக்குவரத்து படிகள் மற்றும் எரிபொருள் படிகளாக ரூபா 750,000 கூட்டுத்தொகை செலுத்தப்பட்டுள்ள போது அதிகாரசபையின் குழாம் வாகனமொன்றும் பயன்டுத்தப்பட்டிருந்தது. மேலும், எரிபொருள் படிகளுக்கு மற்றும் போக்குவரத்து படிகளுக்கு மேலதிகமாக சாரதி சம்பளங்கள் மற்றும் படிகளாக ரூபா 619,826 மற்றும் எரிபொருளுக்காக ரூபா 400,199 தொகை அதிகாரசபையினால் மேலதிகாமாக செலவிடப்பட்டிருந்தது. | 2015 மே 25 ஆந் திகதிய திறைசேரி செயலாளரின் PED 1/2015 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். | தற்போதைய சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்படுவதாகவும், உச்ச எல்லை மீறப்படும் சந்தர்ப்பத்தில் அமைச்சின் செயலாளரின் ஊடாக அங்கீகாரம் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அறவிடப்பட வேண்டிய தொகையை அறவிடுவதற்காக சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஊ) | வாகன பழுதுபார்த்தல்கள் தொடர்பில் மக்களின் முறைப்பாடுகள் செயற்குழுவிற்கு கிடைத்த முறைப்பாடொன்றின் விசாரணைக்காக நியமிக்கப்பட்ட குழுவினால் பழுதுபார்ப்பதற்காக சுற்றறிக்கை மற்றும் சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் மற்றும் விலைக்கேள்வி நடைமுறை பின்பற்றப்படுகின்றமை காணக்கூடியதாக இல்லாதிருந்தமையால் பழுதுபார்த்தல் தொடர்பில் திட்டமிடப்பட்ட சான்றுப்படுத்தலொன்றை | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்க பழுதுபார்த்தல் மேற்கொள்ளப்பட வேண்டும். | ஆளுனரின் அங்கீகாரத்தினை பெற்றுக்கொண்டு உரிய கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. |

பெற்றுக்கொள்ள முடியாதிருந்ததுடன் கல்வி அமைச்சின் செயலாளரின் பழுதுபார்த்தல்களுக்காக செலவிடப்படும் தொகை 285,000 ஆக சுட்டிக்காண்பிக்க உள்ளபோது அதற்குரியதாக அனுப்பப்பட்டுள்ள மேன்முறையீடொன்றினை ஏற்றுக்கொண்டு ஆளுனரின் அங்கீகாரத்தின் பிரகாரம் ரூபா 1,285,000 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்தது.

## 4.6 வெளிப்படையான மோசடிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
| --- | --- | --- |
| தென் மாகாண அபிவிருத்தி அதிகாரசபையினால் குறைப்பயன்பாட்டிற்கு உட்படுத்தப்பட்டு நிதிகள் பயன்படுத்தப்பட்டு முயற்சிகளினை ஊக்குவிக்கும் அபிவிருத்தி கடன் முன்மொழிவு முறைமையின் கீழ் 2019 ஆம் ஆண்டின் போது வெளிவாரி தரப்பினர் இருவருக்கு SPEED DRAFT கடனாக ரூபா 5,000,000 கூட்டுத்தொகை வழங்கப்பட்டிருந்தது. இதுதொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டது. | | |

| | | | |
|---|---|---|---|
| (அ) | இந்த கடன் முறைமையை நடைமுறைப்படுத்துவதற்காக பிரதான செயலாளர் பிரதி பிரதான செயலாளர் (திட்டமிடல்) அல்லது பிரதான அமைச்சின் செயலாளரின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிராததுடன் கடன் பெறுநர்களிடமிருந்து பிணைகள் பெற்றுக்கொள்ளப்படாது அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகத்தின் தனிப்பட்ட காணியின் மீதான பிணையின் அடிப்படையில் கடன் பணம் விடுவிக்கப்பட்டிருந்தது. | உரிய அங்கீகாரம் மற்றும் பிணைக்காப்பீடு பெற்றுக் கொள்ளப்பட்டு கடன் வழங்கப்பட வேண்டும். | இந்த கடன் முறைமையினை நடைமுறைப்படுத்துவ தற்காக அங்கீகாரம் இடம்பெற்றுள்ள மோசடி தொடர்பில் இடம்பெற்றவாறு உள்ளது. |
| (ஆ) | மாகாண நிதி விதி 83 இன் பிரகாரம் வெளியிடப்பட்ட வெளியிடப்பட்ட பிரதான அமைச்சின் செயலாளரின் நிதி அதிகார சுற்றறிக்கைக்கு இணங்காத வகையில் கடன் பணம் செலுத்துவதற்குரிய கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களை அங்கீகரித்தல் மற்றும் சான்றுப்படுத்தல் மற்றும் கொடுப்பனவுகளை மேற்கொள்ளுதல் ஆகிய அனைத்து பணிகளும் அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் கடன் பெறுநர்களின் பெயரில் வழங்கப்பட்ட ரூபா 5,000,000 கூட்டுத்தொகையான காசோலைகள் இரண்டினதும் பதிவேடுகள் இரத்துச் செய்யப்பட்டு பணிப்பாளர் நாயகத்தினால் வங்கியில் | மாகாண நிதி விதி 83 இன் பிரகாரம் வழங்கப்பட்ட நிதி அதிகாரங்கள் சுற்றறிக்கைக்கு இணங்க செயற்பட வேண்டும். | ஆரம்ப விசாரணை அறிக்கையினை அடிப்படையாகக் கொண்டு மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| | நேரடியாக பணம் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. அவ்வாறே கடன் பெறுநர் ஒருவரின் ரூபா 1,557,610 தொகையான கடன் தவணை அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகத்தினால் செலுத்தப்பட்டிருந்ததுடன் எதிர்காலத்தில் செலுத்தப்பட வேண்டிய கடன் தவணைகளுக்காக பணிப்பாளர் நாயகத்தின் தனிப்பட்ட கணக்கிற்கு உரிய பெறுமதிகளும் மற்றும் திகதியும் குறிப்பிடப்படாத வெற்று காசோலைகள் 06 கையளிக்கப்பட்டிருந்தன. | | |

**4.7 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | அமைச்சு / திணைக்களங்கள் மற்றும் அலுவலகங்களுக்கு உரிய தீர்க்கப்படாத 39 சந்தர்ப்பங்களுக்குரிய ரூபா 8,251,133 தொகையான வாகன விபத்துக்கள் தொடர்புடைய நட்டங்கள் 14 சந்தர்ப்பங்களுக்குரிய ரூபா 1,153,277 தொகையான ஆதன நட்டங்கள் மற்றும் ரூபா 1,837,094 தொகையான பண மோசடி உள்ளடங்களாக மொத்த நட்டங்களின் கூட்டுத்தொகை ரூபா 11,241,504 ஆகும். | நட்டங்கள் மற்றும் இழப்புக்களுக்கு உரிய பணத்தினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | 36 சந்தர்ப்பங்களுக்கு உரிய ரூபா 7,705,819 தொகையான வாகன விபத்துக்கள், 12 சந்தர்ப்பங்களுக்கு உரிய ரூபா 774,457 தொகையான ஆதன நட்டங்கள் மற்றும் 1,837,094 தொகையான பண மோசடிகளை தொடர்ந்தும் அறவிட வேண்டியுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | திணைக்களத்தினால் 2018 ஆம் ஆண்டின் போது ரூபா 2,725,300 செலவிடப்பட்டு 744 மெத்தைகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. பெறுகைகள் நடைமுறையின் வெளிப்படைத் தன்மையுடன் மேற்கொள்ளப் படாமையினால் நிறுவனத்திற்கு ரூபா 251,500 ஆன நட்டம் ஏற்பட்டிருந்தது. இந்த மெத்தைகள் திணைக்களத்தின் கீழுள்ள நிறுவனங்களிடையே உரிய முறையில் பகிர்ந்தளிக்கப்பட்டமைக்கான எழுத்துமூல சான்றுகள் இல்லாதிருந்ததுடன் பகிந்தளிக்கப்பட்ட மெத்தைகளின் பெரும்பாலான எண்ணிக்கையானவை சிறுவர் விடுதிகளில் பயன்படுத்தப்படாது களஞ்சியப் படுத்தப்பட்டிருந்தது. | பெறுகைகள் நடைமுறையின் வெளிப்படைத் தன்மையுடன் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் கொள்வனவு செய்யப்பட்ட பொருட்கள் உரிய முறையில் பயன்படுத்தப்பட வேண்டும். | மெத்தைகளை கொள்வனவு செய்வதற்கு முன்னர் சிறுவர் இல்லங்களின் தேவைப்பாட்டினை வினவி வெளிப்படைத் தன்மையுடன் பெறுகைகள் நடவடிக்கைகளை மேற்கொண்டேன். |

## 4.8 ஒப்பந்த நிர்வாகத்திலான குறைபாடுகள்

---

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மதிப்பிடப்பட்ட பெறுமதி ரூபா 3,746,000 தொகையான அம்பாந்தோட்டை நிவர்த்தன கற்சுவர் மற்றும் மதிலினை நிர்மாணிக்கும் ஒப்பந்தம் தகைமை பரிசோதனை இன்றி உரிய நிதி எல்லைகளை விஞ்சி | இது தொடர்பில் விசாரணை யொன்று மேற்கொள்ளப் பட்டு கூடுதலாக செலுத்தப்பட்டுள்ள தொகையை மீள | கூடுதலாக பணம் செலுத்தப்பட்டிராததுடன் தொழில்நுட்ப உத்தியோகத்தரின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. எவ்வாறெனினும், |

| | | | |
|---|---|---|---|
| | கிராம அபிவிருத்தி சங்கமொன்றிற்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன் நிர்மாண பணிகளுக்காக ரூபா 987,568 தொகை கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது. | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நட்டம் தொடர்பில் தொழில்நுட்ப நிபுணரின் அறிக்கை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | மாபோதர றுகுணு ரன்சலு நிறுவனத்திற்கு புதிய நான்கு மாடி கட்டிடமொன்றினை நிர்மாணிப்பதற்காக ரூபா 8,398,478 தொகைக்கு ஒப்பந்த நிறுவனமொன்றுடன் 2018 நவம்பர் 05 ஆந் திகதி முதல் 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரையான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு 2019 ஆம் ஆண்டின் போது ரூபா 7,209,100 தொகை செலுத்தப்பட்டிருந்தது. அந்த தொகையினுள் திட்டமிடப்பட்ட மாற்றங்கள் கருத்திற் கொள்ளப்படாமையினால் ரூபா 259,974 தொகை மற்றும் 02 வேலை விடயங்களுக்காக ரூபா 593,244 தொகையுமாக ரூபா 853,218 தொகை கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது. | இது தொடர்பில் விசாரணையொன்றினை மேற்கொண்டு கூடுதலாக செலுத்தப்பட்ட தொகையினை மீள அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட விலையின் பிரகாரம் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டமையால் கூடுதலான கொடுப்பனவு ஒன்று இடம்பெற்றிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | பலப்பிட்டிய ஆதார வைத்தியசாலையின் உத்தியோகபூர்வ வீட்டு கட்டிடத் தொகுதியினை நிர்மாணிக்கும் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டு 01 வருடத்திற்கும் குறைவான காலத்தினுள் கட்டிடத்திற்கு பயன்படுத்தப்பட்ட அலுமினியம் பவுடர் கோட்ட் (Aluminium Powder Coated) ஜன்னல்களுக்கு மற்றும் அதன் பார்களுக்கு பவுடர் கோட்ட் (Coating) கழன்று போயிருந்தது. அதற்காக செலுத்தப்பட்டிருந்த ரூபா 7,010,091 தொகை உரிய நியமமின்றிய நிர்மாணங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | உரிய நியமத்துடன் கட்டுமானங்கள் இடம்பெற வேண்டும். | ஒப்பந்ததாரரினால் குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்படாத போது செலுத்துவதற்குரிய பிடி காசு தொகையில் ஏனைய ஒப்பந்ததாரரொருவரை கொண்டு அந்த குறைபாடுகளை நிவர்த்தி செய்கின்றேன். |
| (ஈ) | பொல்வத்த ஆயுர்வேத மருத்துவமனையின் நான்கு மாடி பிணியாளர் கட்டிடத் தொகுதியின் நிர்மாணிக்கும் பணி தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| (i) | திட்டமிடப்பட்ட கட்டமைப்பு ரீதியான திட்டங்கள் மற்றும் மொத்தக் கிரய மதிப்பீடொன்றினை தயாரிக்காது ரூபா 10 மில்லியனுக்கு குறைந்த பொறியியலாளர் மதிப்பீட்டின் மூலம் கட்டம் 5, கட்டுமான அபிவிருத்தி நிறுவனத்தின் - C7 பதிவு ஒப்பந்ததாரர் ஒருவருக்கு போட்டி அடிப்படையிலான விலைக்கேள்வி கோரல் இல்லாது ஒப்படைக்கப்பட்டமையினால் C1, | அரசிற்கு நலனான முறையில் பணியினை நிறைவேற்ற வேண்டும். | அபிவிருத்தி திட்டத்தில் ஒதுக்கப்பட்ட நிதியேற்பாட்டின் அடிப்படையில் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளன. |

| | | | |
|---|---|---|---|
| | 2 அல்லது 3 ஆகிய தகைமைகளுடைய ஒப்பந்ததாரர் ஒருவரை விட நலன்களில் அதிகமானதும் செயற்திறனானதுமாக நிறைவேற்றிக்கொள்ள முடியாது போயுள்ளது. | | |
| (ii) | நியமத்திலிருந்து விலகி கொங்கிறீட் கம்பி ஆகியவற்றின் பணிகளுக்காக ரூபா 32,427,838 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | நியமத்துடனான பொருட்கள் பயன்படுத்தப்பட வேண்டும். | கொங்கிறீட் பணிகள், கம்பி பணிகள் மற்றும் அச்சுகளுடன் தொடர்புபட்ட பணிகள் மற்றும் மாவட்ட பொறியியல் அலுவலகத்தின் தொழில்நுட்ப உத்தியோகத்தரின் கண்காணிப்பின் கீழ் உரிய நியமத்தின் பிரகாரம் மேற்கொள்ளப் பட்டுள்ளன. |
| (iii) | அசாதாரணமான தாமதத்திற்காக ரூபா 1,566,633 தொகையான தாமத கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | சமர்ப்பிக்கப் பட்டிருந்த காரணங்களை ஏற்றுக்கொள்ள முடியாது என்பதால் தாமத கட்டணம் அறவிடப்பட வேண்டும். | ஒப்பந்ததாரரால் சமர்ப்பிக்கப்பட்ட காரணங்கள் நியாயமானவையா எனக் கருதி கால நீடிப்புச் செய்யப்பட்டது. |
| (iv) | 30 சதவீதமான முற்பண தொகை முதலாவது நான்கு கட்டங்களில் கிரமமாக அறவிடப்படாது ரூபா 6,083,029 தொகை நீண்டகாலத்தினுள், ஒப்பந்ததாரரிடம் நிறுத்தி | முற்பணங்களை சரியான விகிதத்தின் அடிப்படையில் அறவிடப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கப்பட்டிருக்க வில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | வைக்கப் பட்டிருந்தமையினால் ஒப்பந்ததாரருக்கு நலனான விதத்தில் செயற்பட்டமையை காணக்கூடியதாக இருந்தது. | | |
| (v) | ஒப்பந்ததாரினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த அளவிடைப் பத்திரத்தில் அழிக்கும் பொருள் பயன்படுத்தப்பட்டு அழித்து மாற்றப்பட்டிருந்ததுடன் அதன் உப பிரதிகளும் திறக்கப்பட்டிருந்ததுடன் தொழில்நுட்ப மதிப்பாய்வுக்குழு மற்றும் பெறுகைகள்குழு அதற்குரிய பெறுகைகள் வழிகாட்டி கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | கருத்து தெரிவிக்கப்பட்டிருக்க வில்லை. |
| (உ) | யசோதபுர முன்மாதிரி கிராமத்திற்காக தகவல் தொழில்நுட்ப நிலையமொன்றினை நிர்மாணிக்கும் பொருட்டு ரூபா 26,924,982 ஆன தொகைக்கு 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் பணியினை நிறைவு செய்வதற்கு 2016 திசெம்பர் 23 ஆந் திகதி தனிப்பட்ட ஒப்பந்ததாரரொருவருடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. 02 மாடிகளைக் கொண்ட கட்டிடத்தினை நடைமுறைச் சாத்தியமாக நிறைவு செய்ய முடியாத 08 நாட்களினுள் பூர்த்தி செய்வதற்கு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன் | பணியின் காலத்தினை நீடிப்புச் செய்வதுடன் செயலாற்றல் பணியின் காலமும் நீடிப்புச் செய்யப்பட வேண்டியதுடன் உரிய நியமம் மற்றும் உடன்படிக்கை பெறுமதியின் அடிப்படையில் நிர்மாணங்கள் நிறைவு செய்யப்பட வேண்டும். | ரெம்பேட் கூடுதலாக செலுத்தப்பட்ட தொகையினை மீள அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு உள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | பணி நிறைவு செய்தல் 2019 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் இடம்பெற்றிருக்கவில்லை. செயலாற்றல் பிணையின் காலம் நீடிப்பு செய்யப்படாது பணியின் காலம் 842 நாட்களினால் நீடிப்புச் செய்யப்பட்டிருந்தது. லெமினேட் டெம்பேட் கண்ணாடிகளினை பொருத்தும் பணிக்காக போலியாக ரூபா 7,144,677 தொகை, பணியின் காலத்தினை நீடிப்புச் செய்தமையினால் கூறுவிலைகள் வேறுபட்டதன் அடிப்படையில் ரூபா 732,664 மற்றும் மேலதிக பணிகளின் கீழ் ரூபா 357,566 எனுமாறு ரூபா 8,234,907 கூட்டுத்தொகை செலுத்தப்பட்டிருந்தது. | | |
| (ஊ) | தென் மாகாண அபிவிருத்தி அதிகாரசபையினால் கொங்கம விவசாய பண்ணை நிலப்பரப்பில் பௌதீக மூலதன சொத்துக்களினை உருவாக்குவதற்கு மற்றும் அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்திற்காக ரூபா 3,389,406 தொகை செலவிடப்பட்டிருந்தது. இதன்போது செயற்திட்டத்திற்கு பயன்படுத்தப்படாத கட்டிடப் பொருட்கள் மற்றும் ஏனைய பொருட்களுக்காக ரூபா 1,138,680 தொகை வழங்குனரினால் விநியோகிக்கப்பட்டிராததுடன் பொருட்கள் மற்றும் | கூடுதலாக செலுத்தப்பட்ட பணத்தினை மீள அறவிட வேண்டும். | பிரதி பிரதான செயலாளர் (பொறியியல் சேவைகள்) மூலம் ஆரம்ப விசாரணைகளுக்காக ஏற்படுத்தப்படுத்தப்பட்டு ள்ளதுடன் அதன் பரிந்துரைகளின் அடிப்படையில் மேலதிக நடவடிக்கைகள் எடுக்கின்றேன். |

சேவைகளுக்காக ரூபா 332,050 தொகை மற்றும் பயிற்சி மற்றும் பயிற்சி பெறாத பதவியணிக்கு அங்கீகரிக்கப்படாத சம்பள வீதங்களினை மிகைத்து மற்றும் பணியாற்றிய உள்ளபடியான நாட்களின் எல்லையினை விஞ்சி ரூபா 443,750 எனும் படியான ரூபா 1,914,480 கூட்டுத்தொகை முறையற்ற விதத்தில் கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது.

## 4.9 செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்

### 4.9.1 நோக்கத்திற்கு புறம்பான பணிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
| --- | --- | --- |
| மாகாண கல்வி அமைச்சினால் 2019 ஆம் ஆண்டிற்கான வருடாந்த திட்டத்திலிருந்து விலகி ஏனைய அத்தியாவசிய பணிகளுக்காக ஒதுக்கப்பட்ட பணத்தினை பயன்படுத்தி ஜய சங்கியா மற்றும் சிசு தரண செயற்திட்டங்கள் தொடர்பில் தரவுகளை உள்ளடக்கிய கையேடுகள் 535,000 எண்ணிக்கையானவை அச்சிடப்பட்டு மாகாண பாடசாலைகளின் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களிடையே பகிர்ந்தளிப்பதற்காக ரூபா 3,353,212 ஆன தொகை செலவிடப்பட்டிருந்தது. இதன்போது | நோக்கத்துடனான பணிகளிலிருந்து விலக செயற்பட கூடாது | தரம் 5, கல்வி பொதுத்தாரதர சாதாரண தரம், உயர்தர பரீட்சைகளில் தொடர்ச்சியான செயன்முன்னேற்றம் தொடர்பில் அறிவூட்டுவதன் மூலம் எண்ணக்கருக்களிலான அபிவிருத்தியினை நோக்காகக் கொண்டு நடைமுறைப்படுத்தப்பட்டது. |

கையேடுகளை அச்சிட்டு பகிர்ந்தளிக்கும் பணியின் நோக்கம் கணக்காயிற்கு தெளிவுபடுத்தப்பட்டிருக்கவில்லை.

### 4.9.2 எதிர்பார்த்த நலன்களை (Outcome) பெற்றிராமை

| கணக்காய்வு அவதானிப்பு | | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மதுனாகல இயற்கை சுடுநீர் ஊற்றுக்கு அண்மியதாக சுற்றுலா வசதிகளினை அபிவிருத்தி செய்யும் பொருட்டு றுனுணு சுற்றுலா பணியகத்தினால் ரூபா 46 மில்லியன் பெறுமதியான 2017 ஆம் ஆண்டு முதல் நிர்மாணிக்கப்பட்டவாறு இருந்த போதிலும், இந்த நிர்மாணப் பணிகள் நிறைவு செய்யப்பட்டிராத காரணத்தினால் மக்களுக்கு அதனை பயன்படுத்த முடியாதிருந்தது. | நிர்மாணப் பணிகள் செயற்திறனுடன் மேற்கொள்ள வேண்டும். | 2020 ஆம் ஆண்டின் முதற் காலப்பகுதி அளவில் செயற்பாட்டு பணிகள் ஆரம்பிப்பதற்கு பணியகம் உத்தேசித்துள்ளது. |
| (ஆ) | சமூக சேவைகள் திணைக்களத்தினால் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 2.8.4 வழிகாட்டிக்கு இணங்காத வகையில் ரூபா 3,786,375 செலுத்தி குறைவான தரம் மற்றும் நிலைத்த தன்மையற்ற 375 உருக்கு | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 2.8.4 வழிகாட்டிக்கு இணங்க செயற்பட வேண்டும். | உற்பத்தியின் தரம் மற்றும் விலைகள் கருத்திற் கொண்டு அரசின் பல்வேறு கூட்டுத்தாபனங்களில் கொள்வனவு செய்யப்பட்டது. |

| | | |
|---|---|---|
| கபட்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. | | |
| (இ) விவசாய திணைக்களத்தினால் 2018 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட பழங்களின் பயிர்ச் செய்கை அபிவிருத்தி மற்றும் சேதன பசளை பயன்படுத்தும் மரக்கறி பயிர்ச்செய்கையின் அபிவிருத்தி செயற்திட்டம் ஆகியவற்றுக்காக ரூபா 4,216,195 ஆன கன்றுகள் கொள்வனவு செய்யப்பட்டு பகிர்ந்தளிக்கப்பட்டிருந்த போதிலும், அவற்றுள் சுமார் 80 சதவீதமான கன்றுகள் அழிவடைந்து எதிர்பார்க்கப்பட்ட நோக்கத்தினை நிறைவு செய்ய முடியாது போனது | இயற்கையான அழிவுகளுக்கு புறம்பாக இடம்பெறும் அழிவுகளை குறைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | கன்று வகைகளின் ஒரு பகுதி இயற்கையான விலங்குகளினால் ஏற்படும் அழிவுகள் மற்றும் வெள்ளம் ஆகியவற்றின் காரணத்தினால் அழிவுக்குள்ளாகி யிருந்தது. |

## 4.10 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| (அ) வாகன கைதவிர்ப்பு | | |
| மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திற்குரிய 08 | அரச நிதி சுற்றறிக்கை 02/2015 இன் பிரகாரம் | 06 வாகனங்களில் 02 வாகனங்கள் சுகாதார அமைச்சிற்கு |

| | | | |
|---|---|---|---|
| | வாகனங்கள் பயன்படுத்தப்படாது பிரதேச மருந்து பொருள் களஞ்சிய பூமியில் தரித்து வைக்கப்பட்டிருந்ததுடன் அவற்றுள் 06 வாகனங்கள் கைதவிர்ப்பதற்கு பரிந்துரை செய்யப்பட்டிருந்தது. அவற்றின் வாகனங்களினை மற்றுமொரு நிறுவனத்திற்கு வழங்குவதற்கு அல்லது அரச நிதி சுற்றறிக்கை 02/2015 இல் ஏற்பாடுகளின் பிரகாரம் கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நடவடிக்கை எடுக்க வேண்டும். | அனுப்பப்பட்டுள்ளதுடன் எஞ்சிய 04 வாகனங்கள் அரச நிதி சுற்றறிக்கை 02/2015 இன் பிரகாரம் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. |
| (ஆ) | விளைவற்ற / குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்<br>------------------------------------------------ | | |
| | சமூக சேவைகள் திணைக்களத்தினால் ரூபா 5,052,295 தொகை செலவிடப்பட்டு உபகரணங்கள் பொருத்தப்பட்ட சிறுவர் பூங்காங்களிலிருந்து ஹல்வாத்தொட்ட நிவர்த்தன இல்லத்தின் உபகரணத் தொகுதி மற்றும் றுகுணு சிறுவர் இல்லத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள விளையாட்டு வலையம் பயன்படுத்தப்படாது விளைவற்றுக் காணப்பட்டது. | சொத்துக்கள் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பூங்காக்களின் தொகுதி பயன்படுத்தப்படுகின்றது. |

## 4.11 பதவியணி நிர்வாகம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
| --- | --- | --- |
| (அ) காலி மாவட்டத்தின் காதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் ஆறு ஊழியர்களுக்கு நீண்டகாலமாக பிரதான அமைச்சிற்கு மற்றும் பிரதான அமைச்சின் அலுவலகங்களுக்கு இணைப்பு செய்யப்பட்டிருந்தனர். 2013 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியினுள் சேவைக்கு சமூகமளிப்பதற்கு விரலடையாள இயந்திரத்தின் மூலம் உறுதிப்படுத்தாது இந்த ஊழியர்களுக்காக மாவட்ட சுகாதார சேவைகள் அலுவலகத்தில் ரூபா 7,585,234 ஆன தொகை சம்பளமாக செலுத்தப்பட்டிருந்தது. | சேவைக்கு வருகை தருவதனை உறுதிப்படுத்தி சம்பளம் செலுத்தப்பட வேண்டும். | பிரதான அமைச்சின் செயலாளரின் அறிவுறுத்தல்களின் அடிப்படையில் பிரதான அமைச்சிற்கு மற்றும் அமைச்சின் அலுவலக பதவியணி இணைப்பு செய்யப்பட்டுள்ளது. சம்பளங்களை செலுத்துதல் காலி மாவட்ட அலுவலகத்தின் வருடாந்த மதிப்பீட்டில் உள்ளடக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | கடந்த 05 வருடங்களினுள் மாகாண சபைக்குரிய மருத்துவமனைகளுக்கு ஏனைய சுகாதார நிறுவனங்களுக்கு இடமாற்றம் பெற்றுச் சென்ற தரப்படுத்தப்பட்ட 672 மருத்துவ உத்தியோகத்தர்களில் 279 பேர் இடமாற்றங்கள் மற்றும் தென் மாகாண சபைக்குரிய மருத்துவமனைகளில் இருந்து மற்றும் ஏனைய சுகாதார நிறுவனங்களிலிருந்து வெளியே இடமாற்றம் பெற்றுச்சென்ற 636 உத்தியோகத்தர்களில் 228 பேரின் இடமாற்றங்கள் 2019 யூன் 30 ஆந் திகதி வரையிலும் நடைமுறைப்படுத்தப்பட்டிருக் கவில்லை. மீளாய்வாண்டின் போது மாகாண சபைக்கு இடமாற்றம் பெற்றுச் சென்ற 111 மருத்துவ உத்தியோகத்தர்களின் 100 பேரின் வருகைகள் இல்லாதிருந்ததுடன் 114 உத்தியோகத்தர்களில் 97 பேர் வெளியேறிச் சென்றிருக்கவில்லை. | இடமாற்றங்கள் நடைமுறைப் படுத்துதல் தொடர்பில் பின்தொடர்தல் இடம்பெற வேண்டும். | கருத்து தெரிவிக்கப்பட்டிருக்க வில்லை. |

## 4.12 பெறுகைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | தென் மாகாண அபிவிருத்தி அதிகாரசபையினால் 2019 ஆம் ஆண்டு 05 ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சைக்காக தோற்றிய மாணவர்களுக்கு வினாத்தாள் தொகுதியொன்று 2019 மார்ச் 31 ஆந் திகதி மற்றும் ஏப்ரல் 04 ஆந் திகதி ஆகிய காலத்தினுள் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தது. எனினும், வினாத்தாள்களினை அச்சிடுவதற்காக 2019 செப்தெம்பர் 20 ஆந் திகதி வரையிலும் அச்சிடல் கட்டளைகள் வழங்குனருக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. எனினும் வினாத்தாள்கள் அச்சிடப்பட்டு ரூபா 1,462,000 பெறுமதியான திகதிகளற்ற பற்றுச்சீட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | உரிய தினத்தில் வழங்குனருக்கு அச்சீட்டு கட்டளை கையளிக்கப்பட வேண்டும். | கூறுவிலைகள் கோரும்போது மோசடியொன்று நிலவியமையால் பெறுகைகள் சபையின் அங்கத்தவர்களினால் அதற்குரிய பெறுகைக்கான தீர்மானம் வழங்கப்பட்டிராததுடன் அதன் பிரகாரம் இந்த அலுவலகத்திற்குரிய அச்சிடல் கட்டளைகள் எவையும் நிறுவனமொன்றிற்கு அதிகாரசபையினால் வழங்கப்படவில்லை என்பதும், பிரதான அமைச்சிற்கு அல்லது ஏதேனும் அச்சிடும் நிறுவனத்திடமிருந்து இந்த பரீட்சை வினாத்தாள்களின் தொகுதி இந்த அலுவலகத்திற்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | மாகாண கல்வி அமைச்சினால் சிசு தரண கொகு உபார வேலைத்திட்டத்தின் கீழ் பரிசுகளினை கொள்வனவு செய்யும் போது | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் செயற்பட வேண்டும். | மாகாண சபை கலைக்கப்படுவதற்கு முன்னர் இந்த பரிசு வழங்கும் நிகழ்வினை நடாத்துவதற்கு தீர்மானிக்கப் |

| | | | |
|---|---|---|---|
| | பெறுகைகள் வழிகாட்டிக்கோவையின் ஏற்பாடுகளுக்கு இணங்காத வகையில் ரூபா 8,566,600 ஆன தொகைக்கு 02 மாதிரி வகைகளில் பரிசுகளின் உறுதிச்சீட்டுக்கள 7969 எண்ணிக்கையானவை கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. இந்த கொள்வனவில் ரூபா 2,569,980 ஆன தொகையான நிதி ரீதியிலான நட்டம் ஏற்பட்டிருந்தது. | | பட்டிருந்ததுடன் குறுகிய காலத்தினுள் குறித்த பணியினை நிறைவேற்ற வேண்டியிருந்தமையினால் கடந்த வருடங்களில் சமர்ப்பிக்கப்பட்ட வழங்குனர்களை வரவைத்து தேவைப்பாடு தொடர்பில் தெளிவுபடுத்தப்பட்டு அதன் பிரகாரம் பெறுகை நடவடிக்கைகளினை மேற்கொண்டேன். |
| (இ) | மாகாண கல்வி அமைச்சினால் தென் மாகாணத்தின் 05 ஆந் தர புலமைப்பரிசு பரீட்சையில் வெற்றி பெற்ற சிறுவர்களினை மதிப்பீடு செய்வதற்காக மேற்கொள்ளப்பட்ட ஜயசங்க சிறுவர் உதவி வேலைத்திட்டத்திற்காக சிறுவர்களுக்கா பதக்கங்களை கொள்வனவு செய்தல் உரிய முறையில் பெறுகைகள் வழிகாட்டிக் கோவை விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்காத வகையில் தெரிவு செய்யப்பட்ட காரணத்தினால் 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளின் போது ரூபா 1,336,120 ஆன நிதி ரீதியிலான நட்டம் ஏற்பட்டிருந்தது. | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் செயற்பட வேண்டும். | 2017 பெறுகைகள் தீர்மானத்தின் அடிப்படையில் நிறைவு செய்யப்பட்ட கொடுப்பனவொன்று என்பதால் இந்த வருடத்தில் அறவிடுவதற்கு எந்தவித இயலுமையும் காணப்படவில்லை. |

## 5. கணக்களிதகைமையும் நல்லாளுகையும்

### 5.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| செலவினத் தலைப்பு 25 இல் தேறிய நிதியேற்பாடுகளில் ரூபா 3,722,820,243 கூட்டுத்தொகையான நிதியேற்பாடுகள் எஞ்சியிருந்ததுடன் அது ஒவ்வொரு தலைப்பிற்கும் உரியதாக கருதும் போது அந்த பெறுமதிகள் ரூபா 757,903 முதல் ரூபா 716,517,769 ஆகியவற்றுக்கு இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது. | நிதியேற்பாடுகளில் ஏற்படும் சேமிப்புக்களை குறைந்த மட்டத்தில் அமையப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கப்பட்டிருக்க வில்லை. |

### 5.2 தீர்க்கப்படாதுள்ள கணக்காய்வு பந்திகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| 2017 நவம்பர் 07 ஆந் திகதி இடம்பெற்ற பாராளுமன்ற கணக்குகள் குழுவின் கட்டளையின் பிரகாரம் தென் மாகாண கல்வி, காணிகள் மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சினால் பதிவு செயலற்றுள்ள வழங்குனர்களுக்கு செலுத்தப்பட்டுள்ள பெறுமதி சேர் வரித் தொகையினை உடனடியாக அறவிட்டு அரச வருமானத்திற்கு செலவு வைக்க வேண்டிய | பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | இந்த பணத்தை உரிய தரப்பினரிடமிருந்து காரணங்கள் தொடர்பில் தெளிவுபடுத்தி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதுடன் சட்டரீதியான நடவடிக்கை எடுக்க தேவையேற்படின் அது தொடர்பிலும் நடவடிக்கை எடுக்கின்றேன். |

போதிலும், ஒப்பந்ததாரர்கள் இருவரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 921,535 ஆன தொகையினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.